Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

# ஹலோ மிரர் மெட்ராஸ்

hellomadrasdaily@gmail.com RNI No.TNBIL/2021/81709 தினசரி காலை நாளிதழ்

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 2 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வியாழக்கிழமை, அக்டோபர் 06, 2022 | 4 பக்கங்கள் | ரூ.2/- | இதழ் 84

## தமிழகத்திற்கு ஒன்றிய அரசின் 3 விருதுகள்: முதல்வர் ஸ்டாலினிடம் அமைச்சர் நேரு வாழ்த்து



சென்னை, அக்டோபர் 06 2022: உயிர்நீர் இயக்க திட்ட செயல்பாடுகளில் சிறப்பாக செயல்பட்டதற்காக தமிழ்நாட்டிற்கு முதல் மாநிலத்திற்கான விருது மற்றும் தூய்மை இந்தியா நகர்ப்புற இயக்கத்தின் கீழ் ராமேஸ்வரம் நகராட்சி மற்றும் போத்தனூர் பேரூராட்சிக்கு வழங்கப்பட்ட விருதுகளை முதலமைச்சர் மு.க. ஸ்டாலினிடம் காண்பித்து நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு வாழ்த்து பெற்றார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலினை இன்று (6-ந் தேதி) தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு சந்தித்து, உயிர்நீர் இயக்க திட்டத்தின் கீழ் 60 சதவிகித குடிநீர் குழாய்கள் இணைப்புகளைக் கொண்ட மாநிலங்களில் சிறந்த செயல்பாட்டிற்காக இந்திய ஜனாதிபதியால் தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட முதல் பரிசிற்கான விருது,

தூய்மை இந்திய நகர்ப்புற இயக்கத்தின் 2.0 பதிப்பின் கீழ் 50 ஆயிரத்து-க்கும் கீழ் மக்கள் தொகை கொண்ட நகரங்களில் தூய்மையான நகரமாக ராமேஸ்வரம் நகராட்சி தேர்வு செய்யப்பட்டு அதற்காக ஒன்றிய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகத்தால் வழங்கப்பட்ட விருது,

தூய்மை இந்தியா நகர்ப்புற இயக்கத்தின் 2.0 பதிப்பின் கீழ் 15 ஆயிரம் முதல் 25 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட நகரங்களில் தூய்மையான நகரமாக கோயம்புத்தூர் மாவட்டம், போத்தனூர் பேரூராட்சி தேர்வு செய்யப்பட்டு அதற்காக ஒன்றிய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி அமைச்சகத்தால் வழங்கப்பட்ட விருது, ஆகிய மூன்று விருதுகளை காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் வெ. இறையன்பு, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பேரூராட்சிகள் ஆணையர் ஆர். செல்வராஜ், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் வி. தட்சிணாமூர்த்தி, நகராட்சி நிர்வாகத் துறை இயக்குநர் பா. பொன்னையா ஆகியோர் உடனிருந்தனர்.

## இமாச்சலப்பிரதேசத்தில் ரூ.1,470 கோடியில் கட்டப்பட்ட எய்ம்ஸ் மருத்துவமனை: பிரதமர் மோடி திறந்து வைத்தார்



சென்னை, அக்டோபர் 06 2022: 1,470 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட இமாச்சலபிரதேச எய்ம்ஸ் மருத்துவமனையை பிரதமர் மோடி திறந்து வைத்தார். 3 ஆயிரத்து 650 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

பிரதமர் மோடி நேற்று இமாச்சலபிரதேச மாநிலம் பிலாஸ்பூருக்கு சென்றார். அவரை மாநில கவர்னர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், முதல்வர் ஜெய்ராம் தாக்கூர், மத்திய அமைச்சர் அனுராக் தாக்கூர், பாரதீய ஜனதா தலைவர் ஜே.பி. நட்டா உள்ளிட்டோர் வரவேற்றனர்.

கடந்த 2017-ம் ஆண்டு அக்டோபர் மாதம், இந்த மருத்துவமனைக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்.

ரூ.1,470 கோடி செலவில் முற்றிலும் பணி முடிவடைந்து செயல்பாட்டுக்கு வந்துள்ள எய்ம்ஸ் மருத்துவமனையை பிரதமர் திறந்து வைத்தார்.

பிலாஸ்பூரில், ரூ.140 கோடி செலவில் கட்டப்பட்ட அரசு ஹைட்ரோ என்ஜினீயரிங் கல்லூரியையும் அவர் திறந்து வைத்தார். அத்துடன், ரூ.3 ஆயிரத்து 650 கோடி செலவிலான பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். அத்துடன் முடிவடைந்த திட்டங்களையும் திறந்து வைத்தார்.

247 ஏக்கரில்ஞ்

எய்ம்ஸ் மருத்துவமனை, 247 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. 24 மணி நேரமும் அவசரகால மருத்துவ வசதிகளும், டயாலிசிஸ் வசதிகளும் உள்ளன. அல்ட்ராசோனோகிராபி, சி.டி.ஸ்கேன், எம்.ஆர்.ஐ. ஸ்கேன், அம்ரித் பார்மசி, மக்கள் மருந்தகம் உள்ளிட்ட வசதிகளும் உள்ளன.

30 படுக்கைகள் கொண்ட 'ஆயுஷ்' கட்டிடமும் உள்ளது. 18 சிறப்பு மருத்துவம், 17 சூப்பர் ஸ்பெஷாலிட்டி துறைகள், 18 மாடுலர் ஆபரேஷன் தியேட்டர்கள், 750 படுக்கைகள், 64 தீவிர சிகிச்சை பிரிவு படுக்கைகள் ஆகியவையும் இடம் பெற்றுள்ளன.

மிகவும் உட்புற பகுதிகளில் உள்ள பழங்குடியின மக்களுக்கு மருத்துவ சேவை அளிப்பதற்கென சிறப்பு பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனையுடன் கூடிய 'எய்ம்ஸ்' மருத்துவ கல்லூரியில் ஆண்டுதோறும் எம்.பி.பி.எஸ். படிப்புக்கு 100 மாணவர்களும், நர்சிங் படிப்புக்கு 60 மாணவர்களும் சேர்க்கப்படுவார்கள்.

ரூ.1690 கோடி

நான்கு வழிச்சாலை

பின்ஜோர் - நலாகருக்கு இடையே 1690 கோடி ரூபாய் மதிப்பில் என்எச் - 105 தேசிய நெடுஞ்சாலையின் நான்கு வழி திட்டத்திற்கும் பிரதமர் இன்று அடிக்கல் நாட்டினார். அத்துடன் நலாகரில் 350 கோடி ரூபாய் செலவில் கட்டப்படவுள்ள மருத்துவக் கருவிகள் பூங்காவிற்கும் அடிக்கல் நாட்டினார்.

அங்கு திரண்டிருந்த மக்களிடையே பேசிய பிரதமர், புனிதமான விஜயதசமி நாளில் அனைவருக்கும் வாழ்த்து தெரிவித்தார்.

சுகாதாரம் மற்றும் கல்விக்கான இரண்டு பரிசுகளை பிலாஸ்பூர் பெற்றுள்ளதாக பிரதமர் தெரிவித்தார். குல்லு தசரா பண்டிகையில் பங்கேற்கும் வாய்ப்பை வழங்கியதற்காக நன்றி தெரிவித்த அவர், தேசத்தின் நலனுக்காக பகவான் ரகுநாத்திடம் தாம் பிரார்த்தித்ததாக கூறினார். தாமும் தமது சகாக்களும் இந்தப் பகுதியில் வாழ்ந்து பணி செய்த பழைய காலங்கள் பற்றியும் பிரதமர் நினைவு கூர்ந்தார் ". இமாச்சலப் பிரதேசத்தின் வளர்ச்சிப் பயணத்தில் பங்கேற்க நான் அதிர்ஷ்டம் செய்திருக்கிறேன்" என்று அவர் கூறினார்.

## ராஜராஜ சோழன் காலத்தில் இந்து மதமே இல்லை: கமல்ஹாசன்



சென்னை, அக்டோபர் 06 2022: ராஜராஜ சோழன் காலத்தில் இந்து மதமே இல்லை; அது வெள்ளைக்காரன் வைத்த பெயர் என்று, பொன்னியின் செல்வன் திரைப்படத்தைப் பார்த்த கமல்ஹாசன் செய்தியாளர்களிடம் கூறினார்.

உலகம் முழுவதும் பொன்னியின் செல்வன் முதல் பாகத்திற்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ள நிலையில், பெரும்பாலான திரையரங்குகளில் இரண்டு வாரங்களுக்கான முன் பதிவு ஏற்கனவே நிறைவு பெற்றது. மிகப் பிரம்மாண்டமாக உருவாகியுள்ள இந்த படம், முதல் நாள் மட்டும் உலகம் முழுவதும் 80 கோடி வசூல் செய்ததாக லைகா நிறுவனம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

இந்து மதம் இல்லை

இந்நிலையில் பீனிக்ஸ் மாலில் உள்ள திரையரங்கில் நடிகர் கார்த்தி, நடிகர் விக்ரம் மற்றும் நடிகர் கமலஹாசன் ஆகிய மூன்று பேரும் பொன்னியின் செல்வன் திரைப்படத்தைப் பார்த்துவிட்டு செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

அப்போது பேசிய நடிகர் கமல்ஹாசன், 'ராஜராஜ சோழன் காலத்தில் இந்து மதம் இல்லை. அப்போது சைவம், வைணவம் மட்டுமே இருந்தது. இந்து என்பது வெள்ளைக்காரன் வைத்த பெயர். மொழி அரசியலை திரைத்துறையிலாவது இல்லாமல் செய்ய வேண்டும் என்றார்.

## அக்.15-க்குள் சொத்து வரி செலுத்தினால் 5% சலுகை: சென்னை மாநகராட்சி அறிவிப்பு




சென்னை, அக்டோபர் 06 2022: அக்டோபர் 15-ம் தேதிக்குள் சொத்துவரி செலுத்தினால் 5 சதவீத சலுகை வழங்கப்படும் என்று சென்னை மாநகராட்சி நிர்வாகம் அறிவித்துள்ளது.

சென்னை மாநகராட்சி பகுதிகளில் வசிப்பவர்கள் முதல் அரையாண்டில் செப்டம்பர் வரையிலும் அடுத்த அரையாண்டு ஏப்ரல் வரையிலும் சொத்துவரி செலுத்தலாம். இந்த நிலையில், பொதுமக்கள், சொத்துவரி செலுத்துவதை ஊக்குவிக்கும் விதமாக, 2-஁ம் அரையாண்டுக்கான சொத்துவரியை அக்டோபர் 15-ம் தேதிக்குள் செலுத்தினால் 5 சதவீதம் சலுகை அளிக்கப்படும் என சென்னை மாநகராட்சி அறிவித்துள்ளது.

அது மட்டுமல்லாமல், 2022-2023-ம் ஆண்டுக்கான முதல் அரையாண்டுக்கான சொத்து வரியில் உயர்த்தப்பட்ட தொகையை இதுவரை செலுத்தாதவர்களுக்கு விதிக்கப்படும் 2 சதவீத அபராதத் தொகையையும் தள்ளுபடி செய்வதாக சென்னை மாநகராட்சி அறிவித்துள்ளது.

மேலும், சொத்து வரியை 'நம்ம சென்னை' செயலி மூலமாகவும், 'கியூஆர்' குறியீட்டை ஸ்கேன் செய்தும், இ-சேவை மையங்களிலும், வரி வசூலிப்பவர்களிடம் நேரடியாகவும் செலுத்தலாம் என்றும் சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்
ALL ONLINE SERVICES

"printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor R.SATHYANARAYANAN"

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com
தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# ஸ்டான்லி மருத்துவமனை 27 சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்து சாதனை



சென்னை, அக்டோபர் 06 2022: சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நடப்பு ஆண்டில் மட்டும் 27 சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதாக மருத்துவமனை முதல்வர் டாக்டர் பாலாஜி தெரிவித்தார்.

அதில் 19 பேர் தங்களது உறவினர்களுக்கு தானமாக ஒரு சிறுநீரகத்தை அளித்ததன் அடிப்படையில் உறுப்பு மாற்று சிகிச்சைகளை மேற்கொண்டதாகவும் அவர் கூறினார்.

இதுகுறித்து டாக்டர் பாலாஜி கூறியதாவது:

சென்னை ஸ்டான்லி மருத்துவமனையைப் பொறுத்தவரை உறுப்பு மாற்று சிகிச்சைகள் தொடர்ந்து சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மூளைச்சாவு அடைந்த நபர்களிடம் இருந்து மட்டும் இதுவரை 135 சிறுநீரகங்கள் தானமாகப் பெறப்பட்டு, தகுதியானவர்களுக்கு பொருத்தப்பட்டுள்ளன.

இதனிடையே, கடந்த ஆகஸ்ட் மாதத்தில் விபத்தில் சிக்கிய 59 வயது கூலித் தொழிலாளி ஒருவர் உயர் சிகிச்சைக்காக ஸ்டான்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். சிகிச்சை பலனின்றி அவர் மூளைச்சாவு அடைந்ததை அடுத்து, அவரது குடும்பத்தினரின் ஒப்புதலுடன் இரு சிறுநீரகங்கள், கல்லீரல், தோல் ஆகியவை தானமாகப் பெறப்பட்டன. அதில் ஒரு சிறுநீரகம் 33 வயதான நபர் ஒருவருக்கு பொருத்தப்பட்டது. அந்த கூலி தொழிலாளியின் உறுப்புகளான இரைப்பை, குடல் ஆகியவைகளும் மருத்துவமனை குழுவினரால் எடுக்கப்பட்டது.

இவ்வாறாக, நடப்பு ஆண்டில் மட்டும் நோயாளிகளின் உறவினர்கள், மூளைச்சாவு அடைந்தவர்களிடமிருந்து 27 சிறுநீரகங்கள் பெறப்பட்டு, அவை உரிய நோயாளிகளுக்கு பொருத்தப்பட்டுள்ளன. அவர்கள் அனைவரும் தற்போது நலமுடன் உள்ளனர்.

இதுதவிர, 10.8.2022 அன்று மூளைச்சாவு அடைந்த 20 வயது இளைஞர் ஒருவரின் கல்லீரல் தானமாகப் பெறப்பட்டு ஸ்டான்லி மருத்துவர்களால் 43 வயதுடைய நபருக்கு பொருத்தப்பட்டு அவருக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டது.

ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் இதுவரை 135 சிறுநீரகங்கள், மூளைச்சாவு அடைந்தவர்களிடம் இருந்து பெறப்பட்டு மாற்று அறுவை சிகிச்சை மூலம் சிறுநீரகம் பாதிக்கப்பட்டவர்களுக்கு பொருத்தப்பட்டது. இதில் இந்த ஆண்டு மட்டும் 4 சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது.

சமீபத்தில் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மற்றும் முதன்மைச் செயலாளர் தலைமையில் அனைத்து மருத்துவ கல்லூரி முதல்வர்களுடன் கோவையில் நடைபெற்ற கலந்துரையாடலில் உறுப்பு தானம் குறித்து பொதுமக்கள் விழிப்புணர்வு பெற வேண்டியதன் அவசியமும், மூளைச் சாவால் இறந்தோரின் குடும்பத்தினரை உறுப்பு தானத்திற்கு ஊக்குவித்து அவற்றை நோயினால் அவதிப்படுவோருக்கு பொருத்துவதால் இறந்தோர் மறுவாழ்வு பெறுகின்றனர் என்றும் எடுத்துரைக்கப்பட்டது.

இவ்வாறு டாக்டர் பாலாஜி கூறினார்.

## டாக்டர்களுக்கு பாராட்டு

ஒரே ஆண்டில் அதிக அளவில் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்த டாக்டர் பிரகாஷ், டாக்டர் திருவருள் ஆகியோரை மருத்துவமனை மருத்துவக் கல்லூரி டீன் டாக்டர் பி.பாலாஜி பொன்னாடை அணிவித்து வெகுவாக பாராட்டினார்.

# தேசிய அரசியலில் சந்திரசேகர ராவ்: ‘பாரத ராஷ்டிர சமிதி’ யாக பெயர் மாரிய ‘தெலுங்கானா ராஷ்டிர சமிதி’



சென்னை, அக்டோபர் 06 2022: நாடாளுமன்ற தேர்தலில் கட்சியை தேசிய அளவில் பிரபலப்படுத்த ‘தெலுங்கானா ராஷ்டிர சமிதி’ என்ற தனது கட்சி பெயரை ‘பாரத ராஷ்டிர சமிதி’ என சந்திரசேகரராவ் மாற்றினார்.

ஆந்திரப் பிரதேசத்தில் இருந்து தெலங்கானாவை தனி மாநிலமாக பிரிக்க வேண்டும் என்ற ஒற்றைக் கோரிக்கையை வலியுறுத்துவதற்காக கடந்த 2001ம் ஆண்டு கே.சந்திரசேகர ராவால் தோற்றுவிக்கப்பட்டது தெலங்கானா ராஷ்டிர சமிதி. ஹைதராபாத்தில் நடைபெற்ற தொடர் போராட்டங்களை அடுத்து கடந்த 2014-ம் ஆண்டு தெலங்கானா தனி மாநிலமாக உருவாகியது. இதையடுத்து, 2014-ல் தெலங்கானாவின் முதல் முதல்வராக பதவி ஏற்ற சந்திரசேகர ராவ், 2018-ல் மீண்டும் முதல்வராக தேர்வானார். தெலங்கானா சட்டப்பேரவைக்கான அடுத்த பொதுத் தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற உள்ளது.

இந்த நிலையில், மத்திய ஆளும் கட்சியான பாஜகவை கடுமையாக எதிர்த்த வரும் சந்திரசேகர ராவ், 2024 நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் அக்கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்துவிடக்கூடாது என்பதை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். இதற்காக, பிஹார் முதல்வர் நிதிஷ் குமார், கர்நாடக முன்னாள் முதல்வர் ஹெச்.டி.குமாரசாமி உள்ளிட்ட பல்வேறு தலைவர்களை சந்தித்து ஆலோசனை மேற்கொண்டார்.

பாஜகவுக்கு மாற்றாக தேசிய கட்சி ஒன்றை தோற்றுவிக்க இருப்பதாகக் கூறி வந்த சந்திரசேகர ராவ், விஜயதசமி நாளான இன்று ஐதராபாத்தில் உள்ள கட்சி அலுவலகத்தில் தனது கட்சித்தலைவர்கள், மந்திரிகள், எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள், எம்.எல்.சி.க்கள், மாவட்ட அளவிலான ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டத்தை நேற்று கூட்டினார்.

இந்த கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளர் என்ற முறையில் கர்நாடக மாநில முன்னாள் முதல்-மந்திரியும், மதச்சார்பற்ற ஜனதாதளம் கட்சித்தலைவருமான எச்.டி. குமாரசாமி தனது கட்சியின் 20 எம்.எல்.ஏ.க்களுடனும், விடுதலைச்சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி., தனது கட்சியின் மற்றொரு எம்.பி.யுடனும் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில், கட்சியின் பெயரான தெலங்கானா ராஷ்டிர சமிதியை பாரத் ராஷ்டிர சமிதி பி.ஆர்.எஸ்.) என மாற்றுவதற்கான தீர்மானத்தை கே.சந்திரசேகர ராவ் கொண்டு வந்தார். இந்த தீர்மானம் ஒருமனதாக ஏற்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இதையடுத்து, கட்சியின் பெயர் இனி பாரத் ராஷ்டிர சமிதி என அழைக்கப்படும் என்றும், இது தேசிய அரசியலில் முக்கிய பங்காற்றும் என்றும் அறிவிக்கப்பட்டது. குறிப்பாக, மத ரீதியாக மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டி அரசியல் ஆதாயம் காணும் பாஜகவுக்கு மாற்றாக பாரத் ராஷ்டிர சமிதி இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்ததாக, நல்லாட்சிக்கான மாடலாக தெலங்கானா மாநில ஆட்சி இருக்கிறது என்பதை தேசிய அளவில் பிரசாரம் செய்ய பாரத் ராஷ்டிர சமிதி முடிவெடுத்துள்ளது.

இதை கட்சி அலுவலகத்துக்கு வெளியே திரளாக கூடி இருந்த அவரது கட்சியினர் விழாவாக கொண்டாடினர். பட்டாசுகளை வெடித்தனர். இனிப்புகள் வழங்கினர். “டி.ஆர்.எஸ்., கே.சி.ஆர்., வாழ்க” என தொண்டர்கள் கோஷமிட்டனர்.

தெலுங்கானா மாநிலத்தில் இருந்து நாடாளுமன்ற மக்களவைக்கு 17 எம்.பி.க்கள் தேர்ந்தெடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

# இந்தி மற்றும் ஆங்கிலத்தில் மட்டுமே சிஜிஎல் தேர்வு நடத்துவதா? மத்திய அரசுக்கு கனிமொழி எம்.பி. கண்டனம்



சென்னை, அக்டோபர் 06 2022: மத்திய அரசு துறைகளில் உயர் பணியிடங்களை நிரப்புவதற்கு ஒவ்வொரு ஆண்டும் தேசிய பணியாளர் தேர்வாணையத்தால் சி.ஜி.எல் தேர்வு நடத்தப்படுகிறது. அவ்வகையில் இந்த ஆண்டுக்கான தேர்வு குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டு, விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. இந்த தேர்வு ஆங்கிலத்திலும் இந்தியிலும் மட்டுமே நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இரண்டு மொழிகளில் மட்டுமே தேர்வு நடைபெறும் என்ற மத்திய அரசின் அறிவிப்புக்கு கனிமொழி எம்.பி. எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டிருப்பதாவது: பணியாளர் தேர்வாணையத்தால், ஒன்றிய அரசின் துறைசார் பணியிடங்களுக்கு நடத்தப்படும் சி ஜி எல் தேர்வுகள் ஆங்கிலம் மற்றும் இந்தியில் மட்டுமே நடத்தப்படும் என ஒன்றிய அரசு அறிவித்திருப்பது கடும் கண்டனத்துக்குரியது. இந்திய ஒன்றியத்தின் இறையாண்மை, அதன் பன்மைத்துவத்தில் உள்ளது. மாறாக, அனைத்திலும் ஒற்றைத்துவத்தை புகுத்திட நினைப்பது ஜனநாயகப் படுகொலை. இவ்வாறு கனிமொழி தெரிவித்துள்ளார்.

# குவைத்தில் சித்ரவதை செய்யப்பட்ட வடசென்னை பெண் மீட்கப்பட்டார்



சென்னை, அக்டோபர் 06 2022: சென்னை தண்டையார்பேட்டையை சேர்ந்தவர் புவனா. இவரது கணவர் ஜேம்ஸ்பால். கூலித் தொழிலாளி. இவர்களுக்கு விசினா (16), விதியா (14) என்ற இரண்டு மகள்கள். குடும்பத்தில் போதிய வருமானம் இல்லாமல் தவித்த புவனா வெளிநாடுகளுக்கு வேலைக்கு ஆட்களை அனுப்பும் சூளைமேட்டை சேர்ந்த ஏஜெண்டை சந்தித்துள்ளார். அந்த நபர் குவைத்தில் வீட்டு வேலைக்கு ஆட்கள் தேவை என்று கூறி இருக்கிறார். மாதம் 150 குவைத்தினார் (இந்திய மதிப்பில் ரூ.39,528) சம்பளம் பேசி கடந்த பிப்ரவரி மாதம் துபாய் அனுப்பி இருக்கிறார்கள். அங்கு ஒரு போலீஸ் அதிகாரியின் வீட்டு வேலைக்காக நியமித்துள்ளார்கள். அங்கு புவனாவை வேலை வாங்கினார்கள் என்பதைவிட சித்ரவதை செய்திருக்கிறார்கள் என்பதே உண்மை. தினமும் அதிகாலை 5 மணிக்கு எழுந்து வேலை செய்ய வேண்டும். தொடர்ந்து நள்ளிரவு 1 மணிவரை ஓய்வே இல்லாமல் வேலை செய்ய வேண்டும். கொஞ்சம் ஓய்வெடுத்தாலும் அடி விழும். அதையும் தாங்கி வேலை செய்த புவனாவுக்கு சம்பளமும் பேசியபடி கொடுக்கவில்லை. மாதம் ரூ.26,750 மட்டுமே கொடுத்துள்ளார்கள். அவரை செல்போனிலும் பேசக்கூடாது என்று கட்டுப்பாடு விதித்துள்ளார்கள். ரத்தக்காயம் ஏற்படும் அளவுக்கு புவனாவை அடித்து துன்புறுத்தி இருக்கிறார்கள். புவனா இரவில் ஓய்வெடுப்பது 2 அல்லது 3 மணிநேரம் தான். அதற்காக அவருக்கு ஒதுக்கப்பட்ட இடம் கழிவறை. அந்த அறையை படுக்கையறையாக மாற்றிக்கொள்ளும்படி கூறி இருக்கிறார்கள். அந்த அறையிலேயே தங்கிய புவனா தனது நிலமையை வீடியோவாக பதிவு செய்து சென்னையில் உள்ள உறவினர்களுக்கு அனுப்பினார். அதை வைத்து தண்டையார்பேட்டை போலீசில் புகார் செய்யப்பட்டது. புவனாவை மீட்டுத்தரும்படி முதல்-அமைச்சர் மு.க. ஸ்டாலினுக்கும் கோரிக்கை வைத்தனர். அதைத் தொடர்ந்து மத்திய அரசின் உதவியுடன் புவனாவை மீட்க முயற்சி எடுத்தனர். இதற்கிடையில் புவனா மீட்கப்பட்டு அங்குள்ள தமிழ் சங்கத்தில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளார். அவர் இன்று அல்லது நாளைக்குள் சென்னை திரும்புவார் என்று அமைச்சர் செஞ்சி மஸ்தான் கூறினார்.

ஹலோ மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி
வியாழக்கிழமை, அக்டோபர் 06, 2022

# பூனாவல்லா ஃபின்கார்ப் நிறுவனத்தின் மதிப்பீடு, கேர் ரேட்டிங்ஸ் ஆல் ஏ ஏ ஏ க்கு மேம்படுத்தப்பட்டது

சென்னை, அக்டோபர் 06 2022: கேர் ரேட்டிங்ஸ் லிமிடெட் ஆனது, பூனாவல்லா ஃபின்கார்ப் லிமிடெட் மற்றும் அதன் துணை நிறுவனமான பூனாவல்லா ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் ஆகியவற்றின் நீண்ட கால மதிப்பீட்டை "கேர் ஏஏஏ (டிரிபிள் ஏ), ஸ்டேபிள்" என உயர்த்தியுள்ளது. இந்த மதிப்பீடு, வங்கிக் கடன் வசதிகள், மாற்ற முடியாத கடன் பத்திரங்கள், சந்தை இணைக்கப்பட்ட கடன் பத்திரங்கள் மற்றும் துணைக் கடன் ஆகியவற்றுக்குப் பொருந்தும். பி எஃப் எல் இன் தலைவர் திரு. ஆதார் பூனவல்லா கூறுகையில், "நிதிச் சேவைகள் வணிகமானது சைரஸ் பூனவல்லா குழுமத்திற்கு மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்ததாக அடையாளம் காணப்பட்டுள்ளது. கேர் இன் தற்போதைய மதிப்பீட்டை ஏஏஏ (டிரிபிள் ஏ) க்கு மேம்படுத்தியிருப்பது, நிதி மற்றும் செயல்பாட்டுச் சிறப்புடன், இந்த நிறுவனத்தின் வலிமை மற்றும் அதன் தலைமைத்துவத்தை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. இது நிதிச் சேவைகளில் முன்னணியில் இருப்பதற்கான எங்கள் பயணத்தில் நிதிச் சேவைகளில் ஒரு தலைவராவதற்கு ஒரு முக்கியமான மைல்கல் மற்றும் வலுவான நிறுவனத்தை உருவாக்குவதற்கான எங்கள் அர்ப்பணிப்புக்கான சான்றாகும். "என்றார்.

மேம்படுத்தல் குறித்து கருத்து தெரிவித்த பி எஃப் எல் இன் நிர்வாக இயக்குனர் அபய் பூடாடா, "இந்த மேம்படுத்தல், எங்கள் கூறப்பட்ட மூலோபாயத்தை செயல்படுத்துவதிலும், தொழில்துறையில் நீண்டகால நிலையான தலைமைத்துவத்திற்கான வலுவான அடித்தளத்தை உருவாக்குவதிலும் எங்களின் இடைவிடாத கவனத்தை பிரதிபலிக்கிறது. இந்த மேம்படுத்தப்பட்ட மதிப்பீடு எங்கள் பொறுப்பு தனியுரிமையை மேலும் வலுப்படுத்தும் மற்றும் எங்கள் பார்வை மற்றும் பணிக்கு ஏற்ப நமது வளர்ச்சி பயணத்தை துரிதப்படுத்தும். வாடிக்கையாளரை மையமாகக் கொண்டு தொழில்நுட்பம் சார்ந்த வளர்ச்சியின் மூலம் நுகர்வோர் மற்றும் எம் எஸ் எம் ஈ பிரிவுகளில் முதல் 3 என் பி எஃப் சி களில் ஒன்றாக இருக்க நாங்கள் உறுதியுடன் இருக்கிறோம் மேலும் அனைத்து பங்குதாரர்களுக்கும் மதிப்பை உருவாக்குகிறோம். "என்று கூறினார்.

மதிப்பீடு மேம்படுத்தலின் முழு விவரங்களையும் இணைக்கப்பட்ட இணைப்பில் காணலாம்.

# சுற்றுலா பஸ் மீது அரசு பஸ் மோதல்: கேரளாவிலிருந்து ஊட்டிக்கு வந்த 9 பேர் பலி



சென்னை, அக்டோபர் 06 2022: ஊட்டிக்கு சுற்றுலா வந்தபோது கேரள பள்ளி மாணவர்கள் வந்த பஸ் அரசு பஸ் மீது மோதிய விபத்தில் 9 பேர் பலியானார்கள்.

கேரளா மாநிலம் எர்ணாகுளம் மாவட்டத்தில் உள்ள தனியார் பள்ளி மாணவர்கள் 42 பேர் மற்றும் 5 ஆசிரியர்கள் நேற்று இரவு தனியார் சுற்றுலா பஸ் மூலம் ஊட்டிக்கு சுற்றுலா செல்வதற்காக புறப்பட்டனர். அப்போது இரவு சுமார் 11.30 மணியளவில் சுற்றுலா பஸ் வடக்கஞ்சேரி மங்கலம் அருகே வந்த போது முன்னால் கோவையை நோக்கிச் சென்ற கேரள அரசு பஸ்சை முந்தி செல்ல முயன்றது.

அப்போது கட்டுப்பாட்டை இழந்த சுற்றுலாப் பஸ் முன்னால் சென்ற அரசு பஸ் மீது பயங்கரமாக மோதி சாலையில் கவிழ்ந்தது. இந்த விபத்தில் தனியார் பள்ளி ஆசிரியர் விஷ்ணு, மாணவி அஞ்ஞனா அஜீத், இமானுவேல், தியா ராஜேஷ், கிரிஸ் வின்டர்பான் தாமஸ், எல்னா ஜோஸ், அரசு பஸ் சென்ற அனூப், ரோஜித் ராஜ், தீபு ஆகிய 9 பேர் உயிரிழந்தனர்.

தகவலறிந்து வந்த வடக்கஞ்சேரி போலீசார் தீயணைப்பு துறையினர் உதவியுடன் மீட்பு பணியில் ஈடுபட்டனர். அப்போது படுகாயமடைந்த மாணவர்கள் மற்றும் அரசு பஸ் பயணிகளை திருச்சூர் அரசு மருத்துவமனை, மற்றும் பாலக்காடு, நெம்மாரா அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது.

9 உடல்கள் மீட்பு

இதனிடையே விபத்தில் சிக்கிய பஸ்சை பொக்லைன் மூலம் தூக்கிய போது பஸ்சின் அடியில் ஆசிரியர் மற்றும் இரண்டு மாணவர்கள் சிக்கி உயிரிழந்தது தெரியவந்தது. விபத்தில் உயிரிழந்த 9 பேர் உடல்களும் பிரேத பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

முதல் கட்ட விசாரணையில் சுற்றுலா பஸ் ஓட்டுநர் அதிவேகமாக பஸ்சை இயக்கியதே விபத்துக்கு முக்கிய காரணம் என தெரிய வந்துள்ளது.

தனியார் பஸ்சில் 42 மாணவர்களும் 5 ஆசிரியர்களும் இருந்தனர். அவர்கள் அனைவரும் எர்ணாகுளம் மாவட்டத்தைச் சேர்ந்த வித்யாநிகேதன் சீனியர் செகண்ட்ரி பள்ளியைச் சேர்ந்தவர்கள்.

விபத்தில் காயமடைந்தவர்கள் பாலக்காடு அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களை மாநில உள்ளாட்சித் துறை அமைச்சர் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதாக மாநில வருவாய் துறை அமைச்சர் கே.ராஜன் தெரிவித்தார்.

பள்ளி பஸ்சில் பயணம் செய்த மாணவர்கள் கூறுகையில், எங்கள் பஸ்சை ஓட்டிய டிரைவர் 80-90 கி.மீ. வேகத்தில் சென்று கொண்டிருந்தார். இவ்வளவு வேகமாக எதுக்கு போகணும்? என நாங்கள் கேட்டோம். ஆனால் ஓட்டுநருடன் வந்த நபர், டிரைவர் அனுபவம் மிக்கவர், சமாளித்துவிடுவார் என சொன்னார். இப்போது இவ்வளவு பெரிய துயரம் நிகழ்ந்துவிட்டது என தெரிவித்தார். ஜிபிஎஸ் பதிவுகளும், அந்த பஸ் அதிவேகமாக சென்றதாகவே உறுதி செய்துள்ளதாக கூறப்படுகிறது.

# பெட்ரோல், டீசல் விலை உயரும் அபாயம்: கச்சா எண்ணெய் உற்பத்தியை குறைக்க எண்ணெய் ஏற்றுமதி நாடுகள் முடிவு




சென்னை, அக்டோபர் 06 2022: கச்சா எண்ணெய் உற்பத்தியை குறைப்பது தொடர்பான அறிவிப்பை கச்சா எண்ணெய் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

உலகெங்கிலும் கச்சா எண்ணெய் தேவை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக கச்சா எண்ணெயின் விலை அதிகரித்துள்ளது.

உக்ரைன் விவகாரம் உள்ளிட்ட சர்வதேச பிரச்சினைகளால் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் பொருளாதார மந்த நிலை ஏற்படலாம் என்ற அச்சம் காரணமாக கச்சா எண்ணெய் வர்த்தகம் பாதிக்கப்பட்டு உள்ளது.

இந்த நிலையில், எண்ணெய் விலையை அதிகரிக்கும் நோக்கில், உற்பத்தியை குறைப்பது தொடர்பான அறிவிப்பை சவுதி அரேபியா தலைமையிலான கச்சா எண்ணெய் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பு (ஒபெக்), நேற்று அறிவித்தது.

அதன்படி, நவம்பர் முதல் எண்ணெய் உற்பத்தியை நாளொன்றுக்கு 2 மில்லியன் பீப்பாய்கள் குறைக்கப்படும் என்று ஒபெக் கூட்டமைப்பு நேற்று அறிவித்தது.

கச்சா எண்ணெய் உற்பத்தியை குறைக்க முடிவு செய்திருப்பதால், சர்வதேச அளவில் பெட்ரோல் - டீசல் விலை உயரும் அபாயம் ஏற்பட்டு உள்ளது.

இது குறித்து அதிருப்தியை வெளிப்படுத்திய அமெரிக்கா கூறியிருப்பதாவது:-

இது ஒரு குறுகிய கண்ணோட்டத்துடன் எடுக்கப்பட்ட முடிவு. ரஷ்யாவுடன் இணைந்து 'கச்சா எண்ணெய் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பு (ஒபெக்)' செயல்படுவது தெளிவாக தெரிகிறது. உக்ரைன் மீதான ரஷ்யாவின் போரால் உலகம் கடுமையான எதிர்விளைவுகளை சந்தித்து வரும் சூழலில் இந்த நடவடிக்கையால் அமெரிக்கா பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளது.

எண்ணெய் உற்பத்தியை குறைக்க உள்ளதாக அறிவித்துள்ள ஒபெக் கூட்டமைப்பு நாடுகளின் முடிவால் குறைந்த மற்றும் நடுத்தர வருமான கொண்ட நாடுகள் அதிகமாக பாதிப்பை சந்திக்கும்.

# அஸ்சா அப்ளாய் ஓப்பனிங் சொல்யூஷன்ஸ் இந்தியா தனது முதல் அனுபவ மையத்தை சென்னையில் திறக்கிறது



சென்னை, அக்டோபர் 06 2022: அஸ்சா அப்ளாய் ஓப்பனிங் சொல்யூஷன்ஸ் இந்தியா, அதன் முதல் அனுபவ மையத்தை சென்னையில் அதன் தேனாம்பேட்டை வளாகத்தில் திறக்கிறது. இதன் திறப்பு விழாவில் அஸ்சா அப்ளாய் ஷார்க் மண்டல தலைவர், மூத்த துணை தலைவர் மற்றும் ஓப்பனிங் சொல்யூஷன்ஸ் ஷார்க் தலைவர் - ராமன் கவுல், இயக்குநர் தகவல் தொடர்பு மற்றும் சந்தைப்படுத்தல் இயக்குநர் அபிஷேக் பாஸ்கர், தென்னிந்திய மண்டல தலைவர்கள் முகமது ரஃபிக், சத்யசாய் பிள்ளை ஆகியோர் கலந்து கொண்டனர்.

அஸ்சா அப்ளாய் ஓப்பனிங் சொல்யூஷன்ஸ் ஷார்க் அமைப்பின் மூத்த துணைத் தலைவரும், தலைவருமான திரு. ராமன் கவுல், விழாவில் பேசுகையில், "இந்தியாவில் எங்கள் முதல் அனுபவ மையத்தை திறப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். எங்கள் நிபுணர்கள் குழுவின் உதவியுடன் எங்கள் தயாரிப்புகள் மற்றும் தீர்வுகளை பற்றி வாடிக்கையாளர்கள் நேரடியாக அறிந்து கொள்ளலாம். எங்கள் கட்டிடக்கலை ஆலோசகர்கள், எங்கள் வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் அணுகல் தேவைகளுக்கு சரியான தீர்வை தேர்வுசெய்ய உதவலாம். எங்கள் மையத்தின்தொடக்கமானது, சரியான விலை, தரம் மற்றும் விநியோக அட்டவணையில், எங்கள் இந்திய வாடிக்கையாளர்களுக்கு எங்கள் கண்டுபிடிப்புகளை இங்கேயே காட்சிப்படுத்த அனுமதிக்கிறது.

அஸ்சா அப்ளாய் ஓப்பனிங் சொல்யூஷன்ஸ் இந்தியா, அஸ்சா அப்ளாய் குழுமத்தின் ஒரு பகுதியாகும். இது 1994 இல் நிறுவப்பட்டது. இது பாதுகாப்பான மற்றும் வசதியான அணுகல் தீர்வுகளை வழங்குகிறது. மெக்கானிக்கல், எலக்ட்ரோ மெக்கானிக்கல் & டிஜிட்டல் பூட்டுகள், சிலிண்டர்கள், சாவிகள், டேக்ஸ், பாதுகாப்பு கதவுகள் மற்றும் டாக்கிங் ஸ்டேஷன்ஸ், கேரேஜ் கதவுகள், நெகிழ் கதவுகள் மற்றும் சுழலும் கதவுகள் போன்ற தானியங்கி நுழைவாயில்கள் போன்ற திறக்கும் தீர்வுகளில் இந்த குழு நிபுணத்துவம் பெற்றது. உலகெங்கிலும் உள்ள வாடிக்கையாளர்களுக்கு முக்கியமானவற்றை பாதுகாப்பாகவும் வசதியாகவும் திறக்கவும் மூடவும் பயன்படுத்தப்படுகிறது. தீ மதிப்பிடப்பட்ட தயாரிப்புகள் நிறுவப்பட்ட வணிக இடங்களில் பரவலாக பயன்படுத்தப்படுவதை காணலாம். இந்த நிறுவனம் பயோமெட்ரிக்ஸ், மொபைல் பாதுகாப்பு மற்றும் நம்பகமான அடையாளங்கள் போன்ற புதிய உயர்நிலை தொழில்நுட்பங்களை உருவாக்கி ஏற்றுக்கொள்கிறது.

70 க்கும் மேற்பட்ட நாடுகளில் அதன் செயல்பாடுகளை கொண்ட, அஸ்சா அப்ளாய் இன் போர்ட்ஃபோலியோ சுமார் 190 பிராண்டுகளை உள்ளடக்கியது. இவர்களில் சிலர் தங்களுடைய சொந்த சந்தையில் குறிப்பிடத்தக்க தலைவர்கள், அதாவது வீட்டு அணுகலுக்கான யேல் மற்றும் பாதுகாப்பிற்கான ஸ்மார்ட் பாதுகாப்பு தீர்வுகள், டிஜிட்டல் ஸ்மார்ட் லாக்ஸ், ஸ்மார்ட் கேமராக்கள், வார்ட்ரோப் பூட்டுகள் போன்றவை நாடு முழுவதும் உள்ள குடியிருப்பு கட்டிடங்களில் பரவலாக பயன்படுத்தப்படுகின்றன. மேலும் எச் ஐ டி அடையாள தொழில்நுட்பத்திற்கான சந்தையில் முன்னணியில் உள்ளது.

தேனாம்பேட்டை அனுபவ மையம் காலை 10:30 மணி முதல் இரவு 8:30 மணி வரை திறந்திருக்கும். சந்திப்பை ஏற்பாடு செய்ய குழுவை தொடர்புகொள்ளவும் அல்லது நேரில் வருகை தரவும். எங்கள் குழு உங்களுக்கு காட்சிகள் மற்றும் விளக்கங்கள் மூலம் ஆதரவளிக்க முடியும்.

# கொட்ட தயாராகும் மழை கனமழையால் அதிக தண்ணீர் வந்தால் உடனுக்குடன் வெளியேற்ற 719 மோட்டார்கள் தயார் - மேயர் பிரியா




சென்னை, அக்டோபர் 06 2022: பருவமழை முன்னேற்பாடுகள் தொடர்பான ஆலோசனை கூட்டத்துக்கு பிறகு மேயர் பிரியா கூறியதாவது:- மழைநீர் வடிகால்வாய் பணிகள் வருகிற 15-ந்தேதிக்குள் முடிந்துவிடும். சிங்கார சென்னை முதல் பகுதி திட்டத்தில் 1354 கிலோ மீட்டர் நீளத்துக்கான கால்வாய் சீரமைப்பு பணிகளில் 95 சதவீத பணிகள் நிறைவடைந்து விட்டன. 1030 கிலோ மீட்டர் தூரத்துக்கு அடைப்புகள் நீக்கப்பட்டு தூர்வாரி முடிக்கப்பட்டுள்ளது. 10-ந்தேதிக்குள் இந்த பணிகள் முடிவடையும். எங்கும் தண்ணீர் தேங்காத அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எங்காவது தண்ணீர் தேங்கினால் 1913 என்ற எண்ணுக்கு தொடர்பு கொள்ளலாம். கடந்த ஆண்டை போல பாதிப்பு வரக்கூடாது என்பதற்காக திட்டமிட்டு பணிகள் செய்யப்பட்டு வருகின்றன. தண்ணீர் சூழ்ந்து பாதிப்பு ஏற்பட்டால் பொதுமக்கள் தங்கவும், அவர்களுக்கு உணவு வழங்கவும் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் கூறினார். மாநகராட்சி கமிஷனர் ககன்தீப்சிங் பேடி கூறும்போது, 'பணிகள் முடிந்த இடங்களில் உடனடியாக குழிகளை மூட உத்தரவிடப்பட்டுள்ளது. குழிகள் உள்ள இடங்களில் தடுப்பு வேலிகள் அமைத்து பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யவும் உத்தரவிடப்பட்டுள்ளது' என்றார். கனமழை பெய்து அதிக அளவு தண்ணீர் வந்தால் தேங்கும் தண்ணீரை உடனுக்குடன் வெளியேற்ற 719 மோட்டார்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன. அதில் 400 மோட்டார்கள் 100 குதிரை திறன் சக்தி கொண்டது. இந்த மோட்டார்கள் ஒவ்வொன்றும் நிமிடத்துக்கு 11,700 லிட்டர் தண்ணீரை வெளியேற்றும் திறன் கொண்டவை. கால்வாய்கள் இணைக்காத இடங்களில் ஏற்படும் தண்ணீர் தேக்கத்தை சமாளிக்க இந்த மோட்டார்கள் பயன்படுத்த உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். தண்ணீர் தேங்க வாய்ப்புள்ள இடங்கள் ஒவ்வொரு மண்டலத்திலும் கண்டறியப்பட்டுள்ளது. 34 இடங்களில் வெள்ளம் சூழ்வது தவிர்க்க முடியாது என்று கூறி உள்ளார்கள். அந்த இடங்களில் கூடுதல் கவனம் செலுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. மழைவெள்ள பாதுகாப்பு தொடர்பான தொண்டு நிறுவனத்தை சேர்ந்த சேகர் ராகவன் கூறும்போது, 'நீர் வழித்தடங்கள் ஆக்கிரமிக்கப்பட்டும், கழிவு பொருட்களால் நிரம்பியும் கிடக்கின்றன. இந்த நிலையில் தண்ணீர் எப்படி போகும்? மாநகராட்சி அதிகாரிகள் உடனடியாக ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். கோவில் குளங்களை சீரமைத்து வைக்க வேண்டும். இல்லாவிட்டால் மோட்டார்கள் மூலம் தண்ணீரை வெளியேற்றினாலும் எங்கே போகும். மீண்டும் பழைய நிலைதான் ஏற்படும்' என்றார். சிவில் என்ஜினீயரான தயானந்த கிருஷ்ணன் கூறியதாவது:- இணைக்கப்படாத கால்வாய்களை இணைப்பதில் இவ்வளவு காலதாமதம் ஏன்? 5 செ.மீ. மழை தண்ணீரை தங்கும் அளவுள்ள கால்வாய்களில் 10 செ.மீ. மழை வந்தால் எப்படி சமாளிப்பது? அதிலும் இப்போது மேக வெடிப்பு மூலம் மழை கொட்டுவதும் ஏற்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

ஹலோ மிரர் மெட்ராஸ்
hellomadrasdaily@gmail.com தினசரி காலை நாளிதழ்
உள்ளது உள்ளபடி



# 'மக்கள் செல்வன்' விஜய் சேதுபதி வெளியிட்ட கிரைம் திரில்லர் 'அஜினோமோட்டோ' படத்தின் ஃபர்ஸ்ட் லுக்




சென்னை, அக்டோபர் 06 2022: நடிகர் ஆர். எஸ். கார்த்திக் கதையின் நாயகனாக முதன்மையான கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் 'அஜினோமோட்டோ' படத்தின் ஃபர்ஸ்ட் லுக் மற்றும் மோஷன் போஸ்டர் வெளியிடப்பட்டிருக்கிறது. இதனை 'மக்கள் செல்வன்' விஜய் சேதுபதி தன்னுடைய இணைய பக்கத்தில் வெளியிட்டிருக்கிறார்.

அறிமுக இயக்குநர் மதிராஜ் ஐயம்பெருமாள் இயக்கத்தில் தயாராகி இருக்கும் முதல் திரைப்படம் 'அஜினோமோட்டோ'. இதில் ஆர். எஸ். கார்த்திக் கதையின் நாயகனாக நடிக்க, அவருக்கு ஜோடியாக நடிகை காயத்ரி ரேமா நடித்திருக்கிறார். இவர்களுடன் அனந்த் நாக், பிரான்சு திவாரி, ஆராத்யா, ஷ்யாம் உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள். கே. கங்காதரன் ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்த திரைப்படத்திற்கு டி. எம். உதயகுமார் இசையமைத்திருக்கிறார். படத்தொகுப்பு பணிகளை எம். எஸ். ஸ்ரீநாத் மேற்கொண்டிருக்கிறார். கிரைம் திரில்லர் ஜானரில் தயாராகி இருக்கும் இந்த திரைப்படத்தை தத்தாத்ரே ஸ்டுடியோஸ் எனும் நிறுவனம் சார்பில் தயாரிப்பாளர்கள் சிவராஜ் பன்னீர்செல்வம் மற்றும் ஆ. தமிழ் செல்வன் ஆகியோர் இணைந்து தயாரித்திருக்கிறார்கள்.

படத்தை பற்றி இயக்குநர் பேசுகையில், "'அஜினோமோட்டோ' என்பது சுவையை அதிகரிக்கக்கூடியது. ஆனால் அது மனிதர்களை மெதுவாக கொல்லும் விஷம். இதனை மையப்படுத்தி 'அஜினோமோட்டோ' படத்தின் கதை தயாராகியிருக்கிறது. கதையில் நடைபெறும் சில சம்பவங்கள், கதாபாத்திரங்களுக்கு, அந்த சமயத்தில் நல்லதாகத் தோன்றும். ஆனால் பிறகு பெரும் ஆபத்தை ஏற்படுத்தும். அதன் பின் விளைவுகளும் கடுமையாக இருக்கும். அது என்ன? என்பதை சுவாரசியமாகவும், விறுவிறுப்பாகவும் சொல்லி இருப்பதே இப்படத்தின் திரைக்கதை. மேலும் இது போன்ற அனுபவங்களை, கழுகு கண் பார்வையுடனான திரைக்கதையாக விவரிக்கும் போது, பார்வையாளர்களுக்கு புது வகையான அனுபவம் கிடைக்கும்." என்றார்.

அஜினோமோட்டோ படத்தின் ஃபர்ஸ்ட் லுக்கில் இடம்பெறும் நாயகனின் தோற்றமும், இணையத்தில் வெளியாகி இருக்கும் மோஷன் போஸ்டரும் ரசிகர்களை பெரிதும் கவர்ந்திருக்கிறது. 'அஜினோமோட்டோ' படத்தின் ஃபர்ஸ்ட் லுக்கிற்கும், மோஷன் போஸ்டருக்கும் இணையவாசிகளிடம் பெரும் வரவேற்பும் ஆதரவும் கிடைத்து வருகிறது.

# ஏஜிஎஸ் எண்டர்டெயின்மெண்ட் தயாரிப்பில் 'கோமாளி' புகழ் பிரதீப் ரங்கநாதன் இயக்கி நடிக்கும் குடும்பத்துடன் ரசிக்கக்கூடிய கலகலப்பான பொழுதுபோக்கு திரைப்படமான 'லவ் டுடே' டிரைலரை எஸ் டி ஆர் (சிம்பு) வெளியிட்டார்

## நவம்பர் 4 அன்று உலகெங்கும் திரையரங்குகளில் வெளியாகிறது 'லவ் டுடே'



சென்னை, அக்டோபர் 06 2022: தமிழ் சினிமாவின் முன்னணி தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்றான ஏஜிஎஸ் என்டர்டெயின்மென்ட் தயாரித்துள்ள புதிய திரைப்படமான 'லவ் டுடே'வின் டிரைலரை நடிகர் சிலம்பரசன் (எஸ் டி ஆர்) இன்று வெளியிட்டார். கல்பாத்தி எஸ் அகோரம், கல்பாத்தி எஸ் கணேஷ், கல்பாத்தி எஸ் சுரேஷ் ஆகியோர் தயாரிப்பில் உருவாகியுள்ள இப்படத்தை 'கோமாளி' புகழ் பிரதீப் ரங்கநாதன் இயக்கி கதாநாயகனாக நடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. உலகெங்கும் உள்ள திரையரங்குகளில் நவம்பர் 4 அன்று இப்படம் வெளியாகிறது. 'லவ் டுடே' திரைப்படத்தின் கிரியேட்டிவ் தயாரிப்பாளராக அர்ச்சனா கல்பாத்தியும், நிர்வாக தயாரிப்பாளராக எஸ் எம் வெங்கட் மாணிக்கமும் பணியாற்றுகிறார். அனைத்து வயதினரும் குடும்பத்துடன் ரசிக்கக்கூடிய நகைச்சுவை ததும்பும் பொழுதுபோக்கு படமாக 'லவ் டுடே' இருக்கும் என்று படக்குழுவினர் தெரிவிக்கின்றனர். இதை மெய்ப்பிக்கும் வகையில் டிரைலரும் அமைந்துள்ளது.

இயக்குநர் பாலாவின் 'நாச்சியார்' படத்தில் நடித்த இவானா 'லவ் டுடே' படத்தின் நாயகியாகவும், சத்யராஜ், ராதிகா சரத்குமார், யோகி பாபு ஆகியோர் முக்கிய வேடங்களிலும் நடித்துள்ளனர். யுவன் ஷங்கர் ராஜாவின் இசை படத்திற்கு பெரும் பலம் சேர்த்துள்ளது.

'லவ் டுடே' படத்திற்கு தினேஷ் புருஷோத்தமன் ஒளிப்பதிவு செய்துள்ளார், பிரதீப் இ ராகவ் படத்தொகுப்பாளராக பணியாற்றியுள்ளார். கலை வடிவமைப்பை எம்கேடி கையாண்டுள்ளார். 'லவ் டுடே' படத்தின் பர்ஸ்ட் லுக் போஸ்டர்கள் பெரும் ஆர்வத்தை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

"இன்றைய காதல் மற்றும் 2 கே தலைமுறையினர் எதிர்கொள்ளும் உறவு சிக்கல்களைப் பற்றி இப்படம் பேசும். மிகுந்த பொழுதுபோக்கு அம்சங்களோடு பார்வையாளர்களை 'லவ் டுடே' ஈர்க்கும்," என்று படக்குழு கூறுகிறது. 'லவ் டுடே' என்ற தலைப்பைப் பயன்படுத்த ஒப்புதல் அளித்த சூப்பர் குட் பிலிம்ஸின் தயாரிப்பாளர் ஆர் பி சௌத்ரி மற்றும் 'தளபதி' விஜய் ஆகியோருக்கு தயாரிப்பாளர்கள் நன்றி தெரிவித்துள்ளனர்.

ஏஜிஎஸ் என்டர்டெயின்மென்ட் பேனரில் கல்பாத்தி எஸ் அகோரம், கல்பாத்தி எஸ் கணேஷ் மற்றும் கல்பாத்தி எஸ் சுரேஷ் ஆகியோர் தயாரித்துள்ள 'லவ் டுடே' படத்தை பிரதீப் ரங்கநாதன் இயக்கி முதன்மை வேடத்தில் நடித்துள்ளார். அர்ச்சனா கல்பாத்தி இப்படத்தின் கிரேயிட்டிவ் தயாரிப்பாளார் ஆவார்.

# சென்னை முதல் கூடூர் வரை 146 கி.மீ வேகத்தில் ரெயில் சோதனை ஓட்டம்



சென்னை, அக்டோபர் 06 2022: சென்னை சென்ட்ரல் ரெயில் நிலையத்திலிருந்து ஆந்திரா கூடூர் ரெயில் நிலையம் வரை 146 கி.மீ. வேகத்தில் ரெயில் சோதனை ஓட்டம் இன்று நடைபெற்றது.

தெற்கு ரெயில்வேயில், பல்வேறு வழித்தடங்களில் ரெயில் பாதை மேம்படுத்துவது, கூடுதல் பாதைகள் அமைப்பது போன்ற பணிகள் நடந்து வருகின்றன. அதற்கேற்ப ரெயில்களின் வேகமும் படிப்படியாக அதிகரிக்கப்பட்டு வருகிறது. இதற்கிடையே, சென்ட்ரல் - கூடூர் தடத்தில் மணிக்கு 146 கி.மீ., வேகத்தில் ரெயிலை இயக்கி இன்று சோதனை நடத்தப்பட்டது.

சென்னை சென்ட்ரல் ரெயில் நிலையத்திலிருந்து கிளம்பிய இந்த ரெயில் தெற்கு ரயில்வே பொது மேலாளர் மால்யா, சென்னை கோட்ட மேலாளர் கணேஷ் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் பயணம் செய்து ஆய்வு செய்தனர்.


ரெயில் இயக்கம் மற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் கொண்ட குழுவினர், ரெயில் பாதையின் தரம், சிக்னல் தொழில்நுட்பம், ரெயில் நிலையங்கள் கடந்து செல்லும் நேரம் உள்ளிட்டவை விபரங்களை சேகரித்து, அறிக்கையாக அளிப்பர். இந்த தடத்தில், வாரிய ஒப்புதல் பெற்று, படிப்படியாக ரயில்களின் வேகம் அதிக்க உள்ளதாக உயர் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# இணையதளத்தை அதிர வைக்கும் 'பவுடர்' டிரைலர்




சென்னை, அக்டோபர் 06 2022: இயக்குநர் விஜய் ஸ்ரீஜி இயக்கத்தில் பிரபல மக்கள் தொடர்பாளர் நிகில் முருகன், வித்யாபிரதீப், சிங்கம் புலி, வையாபுரி நடிக்கும் 'பவுடர்' படத்தின் இசை மற்றும் டிரைலர் வெளியீடு அக்டோபர் 1 அன்று சென்னையில் பிரமாண்டமான முறையில் நடைபெற்றது. தமிழ் சினிமாவின் முன்னணி இயக்குநர்கள் கே. பாக்யராஜ், வசந்த், பார்த்திபன் ,எழில், சசி , எஸ் ஆர் பிரபாகரன், வா கௌதமன், அறிவழகன், பிரபு சாலமன், விஜய் பாலாஜி மற்றும் ஜாகுவார் தங்கம், நக்கீரன் கோபால், ஆடிட்டர் அக்பர், கவிஞர் சினேகன், எழுத்தாளர் அஜயன் பாலா, முன்னணி தயாரிப்பாளர்கள் ஏஜிஎஸ் அர்ச்சனா கல்பாத்தி, சிவி குமார், அம்மா கிரியேஷன்ஸ் டி சிவா, கதிரேசன், சமீர் மற்றும் தமிழ் திரையுலக முன்னணி நடிகர்கள் ராதாரவி, சில்வர் ஜூப்ளி ஸ்டார் மோகன், நாசர், உதயா, ரோபோ சங்கர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு வாழ்த்தி சிறப்பித்த 'பவுடர்' ஆடியோ வெளியிட்டு விழாவில் வெளியான ட்ரெய்லர் இணையதளத்தில் 11 லட்சம் பார்வையாளர்களை கடந்து பலரது பாராட்டை பெற்று வருகிறது. விரைவில் திரைக்கு வர இருக்கும் 'பவுடர்' முதல் பாகத்தை காண ரசிகர்கள் ஆவலுடன் காத்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது என்று தயாரிப்பாளர் ஜெயஸ்ரீ விஜய் மற்றும் இணை தயாரிப்பாளர் கோவை எஸ் பி மோகன் ராஜ் தெரிவித்தனர்.

# மெக்சிகோவில் மர்ம நபர் துப்பாக்கி சூடு: மேயர் உட்பட 18 பேர் பலி



சென்னை, அக்டோபர் 06 2022: மெக்சிகோவில் மர்ம நபர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மேயர் உள்பட 18 பேர் பலியானார்கள்.

தெற்கு மெக்சிகோவில் மர்ம நபர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் அந்நகரத்தின் மேயர் உட்பட 18 பேர் கொல்லப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

குரேரோ மாகாணத்தில் உள்ள டோட்டோலாபானில் இந்த தாக்குதல் நடந்ததாக அரசு வழக்கறிஞர் தெரிவித்தார். மேலும் இருவர் காயம் அடைந்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

மெக்சிகோவில் உள்ள டேரா கலிண்ட்டியில் இந்த சம்பவம் நடந்துள்ளது. இது போதை பொருள் கடத்தல் கும்பலின் முக்கிய பகுதியாக உள்ளது.

இந்த துப்பாக்கி சூட்டில் போலீஸ் அதிகாரிகள் மற்றும் கவுன்சில் ஊழியர்களும் கொல்லப்பட்டனர்,

# கொடநாடு கொலை, கொள்ளை வழக்கு- சி.பி.சி.ஐ.டி விசாரணை அதிகாரியாக ஷகில் அக்தர் நியமனம்




சென்னை, அக்டோபர் 06 2022: நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகே உள்ள கொடநாட்டில் முன்னாள் முதல்-அமைச்சர் ஜெயலலிதாவுக்கு சொந்தமான எஸ்டேட் மற்றும் பங்களா உள்ளது. இந்த பங்களாவில் கடந்த 2017-ம் ஆண்டு கொள்ளை சம்பவம் அரங்கேறியது. அப்போது பல்வேறு ஆவணங்களும் கொள்ளையடிக்கப்பட்டது. கொள்ளை சம்பவத்தின்போது, அதனை தடுக்க முயன்ற காவலாளி ஓம்பகதூர் என்பவரும் கொலை செய்யப்பட்டார். இந்த சம்பவம் தமிழகத்தில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த வழக்கு தொடர்பாக சயான், வாளையார் மனோஜ், சதீசன், திபு உள்பட 10 பேர் கைதுசெய்யப்பட்டனர். தற்போது அவர்கள் ஜாமீனில் உள்ளனர். இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட முக்கிய குற்றவாளியான கனகராஜ் விபத்தில் இறந்துபோனார். தி.மு.க. அரசு பொறுப்பேற்றதும் இந்த வழக்கில் மறு விசாரணை நடந்து வருகிறது. இதற்காக 5 தனிப்படைகளும் அமைக்கப்பட்டுள்ளது. இதுதவிர மேற்கு மண்டல ஐ.ஜி.சுதாகரும் நேரடியாகவே விசாரணை மேற்கொண்டார். தனிப்படை போலீசார் பல்வேறு கோணங்களில் பல நபர்களிடமும் விசாரணை நடத்தி உள்ளனர். இதுவரை தனிப்படையினர் ஜெயலலிதாவின் தோழி சசிகலா, முன்னாள் எம்.எல்.ஏ. ஆறுக்குட்டி, சசிகலாவின் உறவினர் விவேக், கொடநாடு மேலாளர் நடராஜன், வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட சயான், வாளையார் மனோஜ் உள்பட பலரிடமும் விசாரணை நடத்தப்பட்டது. இது தொடர்பான வழக்கு ஊட்டியில் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. சி.பி.சி.ஐ. அதிகாரி நியமனம் தனிப்படை போலீசார் தீவிரமாக விசாரணை நடத்தி வந்த நிலையில், சில தினங்களுக்கு முன்பு கொடநாடு வழக்கு சி.பி.சி.ஐ.டிக்கு மாற்றப்பட்டது. இதற்கான உத்தரவை தமிழக டி.ஜி.பி.சைலேந்திரபாபு பிறப்பித்தார். கொடநாடு வழக்கு சி.பி.சி.ஐ.டிக்கு மாற்றப்பட்ட நிலையில் விசாரணை அதிகாரியும் நியமிக்கப்பட்டுள்ளார். அதன்படி கொடநாடு வழக்கை விசாரிக்கும் சி.பி.சி.ஐ.டி அதிகாரியாக கூடுதல் டி.ஜி.பி. ஷகில் அக்தர் என்பவரை தமிழக அரசு நியமித்துள்ளது. கொடநாடு வழக்கு சி.பி.சி.ஐ.டிக்கு மாற்றப்பட்டு, விசாரணை அதிகாரியும் நியமிக்கப்பட்டு விட்டதால், அவர் வழக்கு தொடர்பான ஆவணங்களை பெற்று உடனடியாக விசாரணையை தொடங்குவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.